**UNDELIVERED ISSUES**

Please re-address all undelivered issues of the **Morning Star** to:- **The Manager,** " Morning Star ", Vaddukoddai.



# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QJ/J/29/News/85*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 145 JAFFNA, FRIDAY, 21st & 28th JUNE, 1985 No. 24 & 25

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



*Subscription*

Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to :*

The Manager, ' Morning Star ', Vaddukoddai.


## University Admission for 1985 — 86

The 1984 G. C. E. (A/L) students have not scored as well in their papers as the preceding batches, according to the Higher Edacation Secretary Dr. Stanley Kalpage. The Colombo district cut-off scores for the various faculties demonstrates " what can be a fall in standards " :—

*Medicine* 253 (261); *Engineering I* 230 (260); *Engineering II* 227 (257); *Bio Science* 225 (234); *Commerce* 220 (234); *Physical Science* 180 (205); *Law* 231 (245); *Arts* 202 (218). [The cut-off scores for last year are in brackets.]

The intake for medicine has been increased by 50, Veterinary Science by 15, Dentistry by 15. A new course, *Quantity Surveing* has been introduced with 19 students.

The total intake this year for the Academic year 1985 — 86 is 5426 selected from 11,698 who applied for admission, having been qualified for it.

A new phenomenon this year is that only 512 students have applied for the Physical Science Course, though 713 were eligible and 780 places were available.

**Admission to A. L. Classes**

Six passes and three credits at the G. C. E. (OL) Examination will not automatically make a student eligible for admission to the G. C. E. (AL) classes to the school of his choice.

According to an Education Circular, the school heads must give first preference to students who have qualified in their own schools. The second preference has to be given to students applying from schools that have no AL classes.


Where students, who have qualified for admission in a school which has AL classes, and also which has the necessary disciplines required, apply for ' a better school ' they will not be selected unless in that school the vacancies have not been filled by the rules regarding preferences outlined by the Department.

Royal College has 500 students qualifying for admission to AL classes from their school and no vacancies. Ananda College has 20 vacancies for which 1000 have applied.

Most schools insist that the applicants should be below 18 and should have qualified in the first attempt at the G. C. E. (OL) Examination.

When a student sends an application, from his school where he has qualified, to another school, his application has to be endorsed by the Principal of the school that there are no AL classes in his school or no ' discipliner ' which the student desires to persue.

## A Distinguished Visitor



Our Diocese was honoured by the visit, in May, of the Rev Robert Scheuermeier. Rev. Scheuermeier has been closely associated with the Indian Churches first as a Basel Mission missionary in India and now as Asia Secretary of the South West German Mission Board. His Mission Board contributes to the various programmes of the Church of South India. This was his first visit to the Jaffna Diocese. Due to the prevailing situation at that time he could not visit much to his disappointment.

He did, however, spend three days in Kilinochchi visiting and seeing for himself the several projects and programmes that our Diocese has undertaken in that area. He also declared open a public water utility at Murukandy and the Day Care Centres for under fives at the C. S. I. Refugee Rehabilitation Centre at Samathanapuram ( Akkarayan ) and at the Shalom Nagar Development Centre. In the photograph he is seen along side Bishop Ambalavanar lighting the traditional oil lamps prior to declaring open the *Shalom Nagar Day Care Centre.* Also seen is the Rev S. Jeyanesan, the pastor incharge of all the C. S. I. programmes in the Kilinochchi area.

*For the Record*

## The First Official Announcement about the Cessation of Hostilities

The major terrorist groups have agreed to a cessation of hostile activities as a precondition to a political solution to problems affecting the northern and eastern parts of Sri Lanka, National Security Minister Lalith Athulathmudali said yesterday ( 18-6-85 ).

" It appears that we have reached a point where we can look confidently forward to a cessation of hostile activity as from today " Mr. Athulathmudali said yesterday. " But I am a little diffident on one score there are many minor groups of terrorists who may not get the message."

The government will be reluctantly compelled to take action against these groups if they commit any hostile acts, the minister said.

Mr. Athulathmudali said that all the major groups of terrorists including Prabakaran's LTTE (Liberation Tigers of Tamil Eelam) have agreed to the cessation of hostile activity as a means of creating a suitable atmosphere for dialogue.

" Pleaee note that I have not used the words ' ceasefire '. The term is ' cessation of hostile activity ", he told pressmen at a news conference summoned by the Additional Secretary of the Ministry of Defence, Dr. Wickrema Weerasooria.

The minister said the security forces will not be withdrawn from the north and east.

" What be government is most interested in at the stage is an adherence to the cessation of hostile activity. It is also most keen to take steps to restore normalcy in all the areas, particularly in Jaffna, where, citizens have been undergoing severe hardship."

The Government Agent of Jaffna has been issued instructions to go ahead with a road maintenance programme. All activity in this regard had been halted for over a year, after the terrorists began using landmines.

The government also wants to examine how the people of Jaffna can be brought back to a normal way of life. The problems will be examined in stages.

" We intend watching the response to the call for a cessation of hostilities, after which other steps will follow ", the minister said.

These steps, Mr. Athulathmudali explained, will be directed towards ensuring that the fishermen get back to work and all other civilian activity returns to normal.

" There are at present several restrictions — the surveillance zone, the prohibited zone, and the curfews... it is a graduated programme that the government will be undertaking " he said.

" All this will depend on a continuing situation without hostile action. We are certain that the people of Jaffna want this."

Asked whether the government had direct contact with the terrorists, the minister said it was obvious that there was " some form of contact ". He refused to elaborate.

Mr. Athulathmudali said the government was most interested restoring representation in parliament to the affected areas.

Asked whether TULF MP's would be restored in their seats if they declared allegience to a unitary state, the minister said this could be the easiest course. It all depended on a solution that was satisfactory to all concerned at all points, he said.

[CDN] 19-6-85]

### Censorship

Press censorship imposed on 1-2-85 continues. It has now been extended to include news or articles on the Universities of Sri Lanka.

### News of Refugees

In August 1983, there were 87,740 Tamil refugees in 48 centres throughout the island. Today the number we learn is 1650 in four centres — Ratmalana, Mullaitivu, Kilinochi and Batticaloa.

After November 1984, there are 45,000 Tamil refugees in 70 refugee camps, fifty of these are in Trincomalee, Batticaloa and Mullaitivu. There are some 9000 Sinhala refugees from the fishing community in camps in the Negombo District.

### IN MEMORIAM

IN AFFECTIONATE AND EVER LOVING MEMORY OF OUR DEAR PARENTS

**Mrs. Caroline Thiraviam Jeyarajah**

Departed : July 22nd 1968

**Mr. Edwin John Jeyarajah**

Departed : June 30th 1983

Affectionately remembered and deeply missed by your loved ones.

10, Church Road, Chavakachcheri.

## Many Happy Returns — Dr. James T. Rutnam

BY

Prof. Bertram Bastiampillai
University of Colombo.

Dr. James T. Rutnam reaches his 80th birthday on 13th June 1985 This is no doubt a very important occasion in his life but it is also an important occasion in the lives and history of other Sri Lankans.

Dr. Rutnam is very well known to most in Sri Lanka as a benign and gracious gentleman. He had learned the art of growing old gracefully after having lived very well over more than a full span of life normally accorded to mankind by the Psalmist.

Dr. James T. Rutnam had his early education in two of the leading Christian private schools when these schools were at their zenith in the educational life of this country. As a student, Dr. Rutnam was, according to those who knew him, intelligent and always rebellious in the cause of what is just and humane He was never an unquestioning subordinate to authority. He wanted to know why and what and kept like Socrates questioning throughout his life, and does so even today.

At the Ceylon Law College he won the coveted prize for Legal research, but soon turned away from Law and took to matrimony and business. His inter-communal marriage at a time when such liaisons where frowned upon is today very well known. This has passed into history through a film produced by his son and whice ran so successfully in the local theatres only a few months ago. As a businessman, Dr Rutnam climbed to the top in a short time and dominated the commercial world of Sri Lanka like a Colossus.

Dr. Rutnam made a number of unsuccessful attempts to enter into politics. Unfortunately, politics eluded him and this in turn enriched the academic ambience of Sri Lanka. Dr Rutnam devoted his time to reading and writing He travelled round the world and visited every well known library and arahive both in the free countries and those with curtains around them His collection of books and original materials, many of them rare and unique has now been preserved in the monument he built for his wife, the Evelyn Rutnam Institute in Jaffna. Many were those who used his library and tapped his brain in their own quest for knowledge.

He took to academic research after having written several learned articles to newspapers and proved his mettle immediately. He made his entry into the charmed circle of academic historians with his invaluable contributings both to ancient and modern history of Sri Lanka. He challenged whatever was a mystery and unravelled the mysteries and made clear to the reader the truth. His quest for academic truth was indeed sedulous and versatile as his many publications do prove

The University of Jaffna honoured him for his contribution to learning and knowledge with a honorary doctorate which Dr. Rutnam justly richly deserved He was the scholar who was looking for the arcane and the esoteric relentlessly and tirelessly.

Dr. Rutnam's wife unfortunately predeceased him. She was a noble lady and genial host. Dr. Rutnam has been blessed with a large family of daughters and sons who are all doing well in different parts of the world while Dr Rutnam himself remains in his motherland, the usual affable, generous and learned man.

We wish him many more years of happiness and to Dr. James T. Rutnam we say good luck and good health.

### Felicitations to Dr. Rutnam

We felicitate *Dr. James Rutnam* on his 80th Birthday which according to news reports, he celebrated with his large circle of friends at Hotel Oberoi on the 13th of June this year.

Politician, Historian and Archeologist, Dr. Rutnam's eight decades have spanned an important stage in our Island's political annals. His 'birthday bash' on 13-6-85 has almost a calendrical coincidence with the cessation of histolities (18-6-85) in Sri Lanka of which he would have been, we are sure, immensly jubilant.

Dr. Rutnam seldom failed to call on us during his visits to Jaffna. We enjoyed his visits and his affable and informal discourses on men and matters. Inspite of his many publications, he never appeared an academic heavyweight but took life in its stride, enjoyed his friends and always hoped for the best.

Though shuttling often between *Sri Lanka* and *Los Angeles*, Dr. Rutnam is a cultured and cultivated Tamil who is proud of his roots in the soil of Jaffna. We look forward to his autobiography "*Fulfilment Regardless*".

— *The Editor.*

### *In brief*

● *Australia* will grant 26,000 visas for those who apply to join members of their immediate family in Australia. A total of 84 000 from all countries of the world would settled in Australia during the year 1985 — 1986.

There is a dearth in Australia for trained Nurses and for technical personnel. Nearly 18,500 will be recruited on this basis. Those who have the wherewithal to start a business in Australia could apply.

## The Youth Year for Us?

Why should we somehow celebrate,
"The Youth Year!", doesn't matter if it is late?
Looked I around me into places,
Searched I for my beloved faces,
Schools libraries and laboratories.
Play grounds fields even factories,
Cinemas streets and boutiques,
Churches houses market places,
All the places showed no traces,
Of our handsome young faces;

"Youth Year for Us?" it just appears,
A ridiculous drama without the hero!
Directed and practised in privacy,
Staged at the theatre. "Democracy",
With the glistening lights "Laws",
Actors strained their vocal cords,
To a clamorous tune "Wipe out Terrorism",
Audience whisper in sheer confusion,
"Where is the hero? What is the theme?"
"Our hero is no more! The theme is Unknown!"

Mrs. Thayalini Thiagarajah.

[Mrs. Thiagarajah (the wife of a C. S. I. pastor) is stationed in the island of Delft and therefore was very close to the recent massacre on the ferry boat.]

*The Church of Sri Lanka*

## The Bishop's Annual Pastoral Visit to the North

Bishop Swithin paid his annual pastoral visit to the North and spent four days among his flock. On Saturday June 15th he visited the Kilinochchi Parish. The Vicar the Rev. Isaac Selvaratnam and the congregation of St. Paul's Church received him. The Bishop confirmed 26 candidates. The Bishop then blessed and dedicated the new dormitory for the handicapped, at Karuna Nilayam. He also laid the foundation for the New Hall. It was indeed an occasion of great joy for Muriel Hutchins M. A. (Oxen) who founded this institution after retiring from teaching as a missionary of the C. M. S. She was able to see the work she pioneered in Kilinochchi when all was a jungle, grow into the institution it is today serving the community in a big way. The parish entertained the Bishop and the visitors to tea and refreshments. The Karuna Nilayam Board members, the clergy from Jaffna and the Archdeacon of Jaffna accompanied the Bishop.

On Sunday the 16th June there was a Confirmation and Holy Communion for all the Parishes in Jaffna at the Church of St. John the Baptist, Chundiculi. The Bishop preached an inspiring sermon on the Risen Christ imparting His peace to the desciples, empowering them with the Holy Spirit and sending them forth into the world that crucified Him. The same Lord imparts His peace to us, empowers us with His spirit and sends us forth today into a world rent by strife and torn asunder by divisions to bring peace, forgiveness reconciliation love and brotherhood. He said that when the unforgivable happens, the only way forward is forgiveness. He also quoted a Chinese proverb that said that when everything is dark, one should not be cursing the darkness, but light a candle. The Vicar the Rev. J Sarvananthan and the Parish entertained the large congregation of over 700 to breakfast at the Jubilee Hall of St. John's College.

On Monday the 17th, the Rural Dean of Jaffna, the Rev. Dr. Donald Kanagaratnam and the clergy met the Bishop at the Principal's Bungalow. and consulted together on the Churches work in the North. The meeting ended with a fellowship lunch at the home of the Rev. & Mrs. J. Sarvananthan. In the afternoon the Bishop visited the Nuffield School for the deaf and blind at Kaithady. He blessed and dedicated three buildings — a kiddies dormitory, the Jubilee Block (an upstair building accomodating class rooms and the library) and the New Hall. A Service was then held in the New Hall at which the Bishop gave a short talk to the children. Both the deaf and the blind children sang lyrics and choruses. The Service ended with the blessing being pronounced by the Bishop. To end it all Milk was boiled and served, and also Milk rice and tea.

The Bishop spent the 18th visiting the sick and the infirm and widows of clergy. He left for Colombo on the 19th morning.

— Cor.

## Peter Pillai Award to Senator Nadesan Q. C.

*The Peter Pillai Social Institute* established in memory of the Very Revd. Fr. Peter Pillai, former Rector of St. Joseph's College and Founder of Aquinas University College, makes an Annual Foundation Award in honour of the Oblate Priest who was one of the most learned in his time in Asia.

This year the recipient of the Award is the leading Civil Rights lawyer and former Senator, Mr. S. Nadesan Q. C.

At a representative gathering at the Sri Lanka Foundation Institute, the Award was made and a glowing tribute paid to Mr. Nadesan by former Chief Justice, Victor Tennekoon.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 145 ] 21, 28-6-1985 [ இதழ் 24, 25


## இதர சமயத்தவரைப் பற்றி கிறிஸ்தவன் கொள்ள வேண்டிய மனப்பான்மையும் பொருளுள்ள அணுகு முறைகளும்

பால் சுதாகர்

நம்பிக்கை என்பது எந்த ஒரு சமயத்தின் தனி உரிமை அல்ல. சமய உறுதிப்பாடு இல்லாதவர்களும் இதர கருத்துக்களில் பற்றுறுதி உள்ளவர்களாய் காணப்படுகின்றனர். இந்தியா பல சமயங்களைக் கொண்ட ஒரு நாடு. நமது நாட்டில் பல விதமான கருத்துக்களைப் பின்பற்றுவோரும் உள்ளனர். இந்த சூழ்நிலையில் இதர நம்பிக்கைகளைப் பற்றிய கிறிஸ்தவ மனப்பான்மையைச் சிந்திப்பது இன்றியமையாதது.

வரலாற்று அடிப்படையில் இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ சமூகம் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது முதல் பிரிவான கிறிஸ்தவர்கள் கேரளத்தில் உள்ள சிரியன் கிறிஸ்தவர்களாவர். இவர்கள் புனித தோமாவினால் கிறிஸ்தவர்களாக மாறினவர்களின் சந்ததிகள், அல்லது நான்காம் நூற்றாண்டில் துன்புறுத்தலினிமித்தம் சிரியாவிலிருந்து குடிபெயர்ந்து கேரளத்தில் தங்கிய ஆதிக் கிறிஸ்தவர்களின் சந்ததிகளாவர். இவர்கள் தங்களைச் சுற்றியிருந்த இந்து சமயத்தவரோடு நல்லுறவு கொண்டனர். ஆனால் அதே நேரத்தில் தங்கள் தொழுகையிலும் வாழ்க்கையிலும் ஒரு வேறுபட்ட கிறிஸ்தவ தனிநிலையை விளக்கி நின்றனர். இரண்டாம் பிரிவினர் மேற்கத்திய அருட்தொண்டர்களால் கிறிஸ்தவர்களாக்கப்பட்டவர்களின் சந்ததிகளாவர். இவர்கள் இந்தியா முழுவதும் பரந்து காணப்படுகின்றனர். கத்தோலிக்கர்களும் சீர்திருத்தக் கிறிஸ்தவர்களுமாக இவர்கள் விளங்குகின்றனர். மேற்கத்திய அருட்தொண்டர்களின் முயற்சியினால் உருவான சபைகள் கடந்த மூன்னூறு ஆண்டுகளுக்குட்பட்டவையே. அவை ஆசிய சமயங்களைப் பற்றி மேற்கத்திய மனப்பான்மைகளையே கொண்டுள்ளன.

இதர சமயங்களைப் பற்றிய கிறிஸ்தவ மனப்பான்மை ஒரே போங்கமைப்பிற்குள் வருவதில்லை. மாறாக, அது பலவகைப்பட்டது.

பல கிறிஸ்தவர்கள் இதர நம்பிக்கையாளர்களை நற்செய்திப் பணிக்கு இலக்காகவும் அம்மக்களைத் திருச்சபையின் நம்பிக்கைக்கு மாற்றிக் கொணர்தல் வேண்டும் எனும் நோக்கமாயுள்ளனர். எனவே இந்துக்கள், முஸ்லீம்கள் சீக்கியர்கள், சமணர்கள், புத்தர்கள் ஆகிய அனைவரும் அவர்கள் பார்வையில் அஞ்ஞானிகளாக காணப்படுகின்றனர். ஆதலால் அவர்கள் மக்களைக் கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகள், மீட்புக்குள் வந்தவர்கள், வெளியே நிற்பவர்களென்று தெளிவாகப் பிரித்துக் காட்டுகின்றனர். யூதர்கள் தங்கள் சமூகத்திற்கு வெளியேயுள்ள மக்களைப் புறஜாதிகளென்றும், கிரேக்கர்கள் தங்களையல்லாதோரைப் பண்பற்றவர்கள் என்றும் அழைத்தனர். கிறிஸ்தவத் திருச்சபை தனக்கு வெளியேயுள்ளவர்களை வேறுபடுத்தும் மனப்பான்மையை யூதர்களிடமிருந்தும் கிரேக்கர்களிடமிருந்தும் சுதந்தரித்துக்கொண்டது. இந்த போக்கு கிறிஸ்தவர்களுக்கு பக்திப் பெருமையாளர்கள், சமய வெளியர்கள், சமயப் பரப்பாளர்கள் போன்ற பெயர்களைக் கொண்டுவருகின்றது. இவ்வகைக் கிறிஸ்தவர்கள் இதர சமய மக்களிடமிருந்து கற்றுக்கொள்ள ஒன்றுமில்லையென எண்ணினர். கிறிஸ்தவர்களின் இவ்வித மனப்பான்மை இதர சமயத்தவரின் தவிர்க்க இயலாத எதிர்த்தாக்குதல்களைப் பிறப்பிக்கின்றது. இதனால் கிறிஸ்தவம் சந்தேகத்துடன் நோக்கப்படுவதோடு, நற்செய்திப்பணி சில வேளைகளில் தடுக்கப்படுகின்றது. மேலும் கிறிஸ்தவம் நம்மை விட்டுச் சென்ற மேல்நாட்டவரின் மிந்திருப்பு சமுதாயமாக எண்ணப்பட்டுள்ளது. இவற்றால் இதர சமயங்களுக்கும் கிறிஸ்தவத்துக்குமிடையே ஒரு பெரும் உறவு முறிவு ஏற்பட்டுள்ளது.

இந்த மனப்பான்மையின் இன்னொரு விளைவு யாதெனில் இந்துக்கள், முஸ்லீம்கள், புத்தர்கள் ஆகிய தங்கள் அண்டை வாசிகளை விட்டு கிறிஸ்தவர்கள் குழுக்களாகச் சேர்ந்து மிஷனறிகள் வாங்கிய பெரிய வளவுகளுக்குள் வாழ்வதாகும். இவ்விதம் மிஷன் காம்பவுண்டு மனநிலை கிறிஸ்தவர்களைத் தங்கள் அயலகத்தாரிடமிருந்து விடாப்பிடியாய் வேறுபடுத்தியுள்ளது. எனவே இதர சமயங்களைப் பற்றிய தவறான எண்ணம் பெருமளவில் கிறிஸ்தவர்களிடம் காணப்படுகின்றது.

இவ்விதத் தவறான எண்ணங்களில் ஒன்று கிறிஸ்தவம் மட்டும் தான் உண்மை, மற்ற சமயங்கள் எல்லாம் பொய் என்னும் மனப்பான்மையாகும். இவ்வித முடிவு கிறிஸ்தவனில் ஒருவிதமான சுயதிருப்தியை உருவாக்குகின்றது.

அதாவது கிறிஸ்தவரல்லாதோருக்கு சத்தியத்தைப் பகிர்ந்தளிக்கும் கருவூலம் தான் என்ற திருப்தியே அது.

இதரசமயங்களைப் பற்றிய ஒரு நேர்மையான கல்வி இந்த எண்ணம் தவறு என நிரூபிக்கும். சமயங்களின் உண்மையும் பொய்மையும் முழு நிச்சயமாகத் தீர்மானிக்கப்பட முடியாது. சரியான அளவுகோல் இல்லாத நிலையில் திருமறையின் போதனைகள் இதர சமயங்களில் இல்லையே என்பதற்காக அவைகளைப் பொய் யென கூறுதல் முற்றிலும் பொருந்தாத ஒன்றாகும். கிறிஸ்தவப் போதனைகளை வைத்து இதர சமயங்களைப் பொய்யாகக் கணித்தால் இந்து, இஸ்லாம், பௌத்தம் ஆகியவைகளின் போதனைகளை வைத்து கிறிஸ்தவமும் பொய் யென்று கணிக்கப்படலாம். இயேசு சொன்னார், "மனிதர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை அவர்களுக்குச் செய்யுங்கள்".

இந்து, இஸ்லாம், பௌத்தம், சொராஸ்திரியம், கன்பூசியஸிசம், சமணம் ஆகிய உலகப் பெருஞ்சமயங்கள் ஆசியாவில் தோன்றினவை. கிறிஸ்தவம் கூட மேற்கத்திய பாணியில் காணப்படினும் அது கிழக்கே தோன்றின ஒன்றாகும். இந்து, பௌத்தம் பிற்பட்ட கால இஸ்லாம் ஆகிய சமயங்கள் தங்கள் திருநூல்களின் உதவியுடன் வரையறுக்கப்பட்ட தத்துவங்களையும் முறையியலையும் உடையனவாகும் இஸ்ரவேலர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சந்தித்த இதர சமயங்களும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்தவர்கள் சந்தித்த சமயங்களும் இக்காலத்தியப் பெருஞ்சமயங்களுக்கு ஒத்தவை அல்ல. ஆகவே திருமறையின் அடிப்படையில் அவைகள் பொய்யானவை என்று மதிப்பிடுவது பயனற்ற செயலாகும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலரும், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களும் தங்கள் நம்பிக்கைகளை விளக்க வெளியிலிருந்து சொற்றொடர்களையும் மேற்கோள்களையும் பயன்படுத்தினார்கள் என்பதற்குத் திருமறையிலேயே சான்றுகள் உள்ளன.

(வளரும்)

## அவியாத நெருப்பு - அணையாத விளக்கு

தென் இந்தியாவிலுள்ள வேலூர் என்னும் நகரத்தில், டாக்டர் ஐடா ஸ்கடர் என்னும் ஓர் அமெரிக்க பெண்மணி, அரும்பணி ஆற்றிவந்தார். இந்நகரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவ மனையையும், மருத்துவக் கல்லூரியையும் நிறுவிய அருள் தொண்டர் இவர்தான்.

ஐடா ஸ்கடர் அம்மாள் பல்லாண்டுகளாக காலை தியானத்திற்கு முன் பரிசுத்த வேதாகமத்தில் I கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் உள்ள வசனங்களை மனப்பாடமாக்கி, நாள்தோறும் காலைத் தியானத்திற்கு முன் சலியாமல் சொல்லி வருவதுண்டு. அத்தருணத்தில் இவ்வசனங்களிலிருந்து ஒளியும் அனலும் வீசிக்கொண்டிருந்ததைத் தான் உணர்ந்ததாகக் கூறினார் அந்த அன்புக்கு அத்தாட்சியாக வேலூரில் அவர்கள் நிறுவியுள்ள மருத்துவ நிலையங்கள் ஸ்கடர் அம்மையாரை நன்றியுடன் நினைத்து இன்றும் வாழ்த்திவருகின்றன — அவியாத நெருப்பு அன்புதான்.

ஆங்கில நாட்டில் இருந்த ஜான் பன்யன் என்னும் பிரபல எழுத்தாளர், திருமறையைத் திறக்கும் தருணம் அப்பக்கத்தைத் தன் புதுக்கண்களால் பார்ப்பதாக எழுதியிருக்கிறார். அதற்கு அத்தாட்சியாக திருமறை நூலுக்கு அடுத்த நூலாகக் கருதும் 'மோட்ச பிரயாணம்' என்னும் நூலை எழுதினார். இப்பெரியார் அந்நூலில் எப்பக்கத்தைத் தான் திறந்தாலும் புதுக்கண்களால் அதைப்பார்த்ததாக அனேகர் சான்று பகர்ந்துள்ளனர்.

கிறிஸ்தவ கவிஞர் வித்துவான் கிருஷ்ணபிள்ளை அவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது, 'மோட்ச பிரயாணம்' என்னும் நூல்தான். சென்னையில் இருந்த ஒரு சிறந்த அறிஞன், 'மோட்ச பிரயாணம்' என்னும் நூலை ஆண்டு தோறும் படித்து முடிப்பதாக கூறினார். எனவே, அணையாத விளக்கு கிறிஸ்தவ திருமறைதான்.

அமரர் தந்தைபோல் கடம்பவனம் அவர்கள் சைவசித்தாந்தியாக இருந்த காலத்தில், கிறிஸ்து சமயத்தில் கவரப்பட்டார். இதற்கு ஏதுவாயிருந்தது, நமதாண்டவர் மொழிந்த "மலைப் பொழிவே" (Sermon on the mount). அவர் கிறிஸ்தவராக வருவதற்குத் தடையாக நின்ற அவரது உறவினர் நடுவில், 'இயேசு எனனும் ஒரு மகாரிஷி விளக்கிய நெறியைக் கேளுங்கள்' என்று கூறி மலைப்பிரசங்கத்தை அடிக்கடி வாசித்து காட்டுவார்.

அவரின் உறவினர் அதனைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, 'அந்த ரிஷி' யார்? அவர் பெயர் என்ன? என்று கேட்டனர், அவர் அதனை மீண்டு வாசித்து இயேசுவின் நற்செய்தியை அறிவித்தார். 'மலைப் பிரசங்கத்தை நினைத்தாலும் அதைப்பற்றிப் பேசினாலும் என் உள்ளத்தில் இன்னும் அனல் வீசும்' என்று சாட்சி பகர்ந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அருள்திரு. பிரான்சிஸ் கிங்ஸ்பரி எனனும் தமிழ் அறிஞர் வாழ்ந்து வந்தார். இவர் மதுரையில் உள்ள பசுமலை சபையில் சில காலம் குருத்துவப் பணியாற்றி வந்தார். மலைப் பிரசங்கத்தை கிறிஸ்தவ வேதாந்தம் என்று சொல்லுவார். வற்றாத குளம், தூராத கிணறு. வாடாத மலர் இயேசு பெருமான் ஒருவரே.

"வேதம் ஒன்றே மெய்யுவங்கை
நெல்லிக் கனிபோல விளங்குந்தோ
நாதன ஒருவர் உலகுலகும் நவிலும்
சாற்று: நற்கதியின்
பாதை யொன்றுண்டது கிறிஸ்து
மார்க்கம்: இதனைப் பகுத்துணர்ந்து
கோதில் பரமகுருபாதம்
கும்பிட்டேத்தும் செகத்திரே.

## சிந்தனைக்கு.......!

- இந்தியாவில் ஆண்டுதோறும் 12000 பேர் மருத்துவத்துறையில் பட்டம் பெறுகின்றனர். இவர்களில் பாதிப்பேருக்குத் தகுந்த வேலை கிடைப்பதில்லை. ஆனால் இந்திய மக்கள் தொகையில் மூன்றில் இரு பகுதியினர் போதுமான மருத்துவ வசதியின்றி கஷ்டப்படுகின்றனர்.
- கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மருந்துகளில் 15 சதவீதம் தரக்குறைவானவை என்று கண்டுபிடித்துள்ளனர்.
- அகில உலக சுகாதார நிறுவனம் உலகில் தினந்தோறும் 1,000 பேர் தற்கொலை செய்து வருகிறார்கள் என்று அறிவித்துள்ளது. இந்தியாவில் நிமிடத்துக்குப் பன்னிரண்டு தற்கொலைகள் நிகழ்கின்றன. தற்கொலைகளைவிட பத்து மடங்கு தற்கொலை முயற்சிகள் நடைபெறுகின்றனவாம்.

### அருள் வாக்கு

கிறிஸ்துவைத் தம் சொந்த மகனென்றும் பாராமல், நம் அனைவருக்காகவும் அவரைக் கையளித்த கடவுள், தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ ?

— ரோமர் 8 : 32.

உதயதாரகை

## "வீரிய விடிவு" ஒன்று, விரைந்து கிடைக்குமென்று........

நம்பிக்கைகளை நியாயமாகவே சுமந்துகொண்டு, நாங்கள் விடுகின்ற மூச்சுக்களில், நாட்கள் சூடேற்றப்பட்டு வருகின்றன. ஆண்டுகள் சிலவாக, எங்களை அவலங்கள் ஆக்ரமிப்புச் செய்துவருவது, அனைவருக்குந் தெரிந்த ஒன்றே. நிம்மதியின்மை, அமைதியின்மை, மகிழ்ச்சியின்மை ஆகியவைகளே, நிஜங்களாகி நீடிக்கின்ற எங்கள் நாட்டு நிலைமையை நினைத்தாற் போதும்; நெஞ்சிற்குள் ஒரு சோகப் பூகம்பம் நிமிடத்தில் வெடிக்கின்றது. ஏதோ ஒரு விதத்தில் கோர இறப்புக்கள், எந்நாளும் — எங்காவது பிறப்பெடுத்த வண்ணமே இருக்கின்றன. ஆட்களைப் பலியெடுத்துக் கொண்டும், அகதிகளாக்கிக் கொண்டும் இருப்பதே, ஆண்டுகள் சிலவற்றின் அவசிய சேவைகளாகத் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

வாழ்க்கை என்பதே இப்படித்தான்; வலுவான ஜீவித ஆதாரமற்றதென நினைத்துக் கொள்கின்ற, அகவாரோக்கியமின்மை தொடர்வது ஆபத்தானது. என்றாலும் என்ன செய்வது? நீக்கிக்கொள்ள முடியாத அளவு, நிரந்தர நோயாளிகளாக்கப்பட்ட பின்னல், அதுவும் நியதியென்று தானே, அவர்கள் கருதுவார்கள். இந்த மாதிரியான இழிந்த நிலைமைகளில் இருந்தெல்லாம், எங்கள் இனத்திற்கு மீட்சி கிடைக்குமா? என்பது, இன்னும் விடை காணப்படாத வினவாகி, விளித்துக் கொண்டிருக்கிறது; எல்லோரையும் நோக்கி.

அந்தகாரம் எங்குஞ் சூழ்ந்த, ஒரு மந்தமான கால கட்டத்தில், நாங்கள் மனிதர்களாக மதிக்கப்படுவதைத்தான், மகிழ்ச்சியோடு எதிர்பார்க்கின்றோம்; எதிர்பார்ப்போம். அந்த, அற்புதாரோக்கியமான பரஸ்பரச் சமூகமதிப்புறவை, அன்போடும், பண்போடும் வரவேற்கக் காத்திருப்பதில் எங்களுக்குள் காலமெல்லாம் மகிழ்ச்சி பூக்கும். தலைநிமிர்ந்து நாங்கள் தமிழராக நடமாடத், தடைகளகன்ற தமிழ்த் தெருக்கள் வரங்களாக வேண்டும். அங்கெல்லாந் தாவியோடித், தமிழ் படித்துத், தகைமை பெற்ற மானுடனாகத், தமிழன் வாழ வேண்டும். மனிதாபிமானம், மானுடநேயம் மகத்தான சொத்துரிமைகளாக, நிரந்தரப்பரிணமிப்புக்கள் பெறவேண்டும்; மறத்தமிழ் மானுடன் ஒவ்வொருவனிடத்திலும். இவையனைத்துந் திருத்தமுறத், திறம்படவே நிறைவேற்றப்பட்டுத், திசையெட்டும் மகிழ்ச்சியிற் திளைக்க வேண்டுமெனில், எங்கள் தமிழினப் பிரச்சினைகள், தவறாமல் அவசரமாகவே தீர்க்கப்படவேண்டியமை, அவசியத்திலும் அவசியம்.

நெஞ்சங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள அந்த........ "வீரிய விடிவு" ஒன்று, விரைந்து கிடைக்குமென்றுதான், இன்னும் நாங்கள் சுவாசித்துக் கொண்டிருக்கின்றோம்.

### செபம் என்றால் என்ன?

செபம் — ஒருவரின் சொல்லாற்றலைத் தெரிவிக்கும் பேச்சு மேடை அன்று — மெய் உணர்வுக்கு அவர் உருக்கொடுக்கும் கலைக்கூடம்.

செபம் — ஒருவர் தன் ஆதரவற்ற நிலையை விவரிக்கும் முயற்சி அல்ல — அவர் தன் தனிமையை உணர்ந்து நடுங்கும் அனுபவம்.

செபம் — புதைகுழியிலிருந்து கதறும் தனி ஒருவரின் அழுகுரல் அல்ல — அன்பின் கட்டுக்குள் பிடிபட்ட உள்ளம் இறைவனோடு உறவாடும்போது எழும் இதயத்தின் நாதமும், இறைவனின் இன்னிசையும் கலந்த மதுரகீதம்.

### போதனையால் சாதனையால்....

ஒரு கன்னம் அறைந்தவர்க்கு மறுகன்னங் காட்டென்றும் கருவியினால் வெட்டுபவர் வெட்டுண்பச் சடியென்றும் பொருநரையும் தேகியென்றும். போதனையால் சாதனையால் மருவவைத்த கிறிஸ்து! உன்றன் மலரடியில் அடைக்கலமே.

— [திரு வி. க]

### செய்தி

○ தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்குப் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான பாடப் புத்தகங்களும் அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்படவுள்ளன. மண்டபம் முகாமில் மட்டும் இருக்கும் 900 மாணவர்களுக்கு 40 ஆயிரம் பெறுமதியான பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டதெனத் தெரிகிறது.

## அமரர் ஆனந்தராஜனுக்கு அஞ்சலி

### வானுலகு சென்றீரே! மாண்புமிகு அதிபரே!!

மாலை ஆறு மணியளவில் "மாண்புமிகு அதிபர்
ஆனந்த ராஜன் இனந்தெரியா ஆடவனால்
சுடப்பட்டார் என்றார்கள்" அந்தோ
வேலை ஓடவில்லை நெஞ்சம் தாங்கவில்லை
பட்ட வேதனை யாரறிவார் ஐயா?! கேண்மின்!

கண்ணீர் விட்டுக் கதறினோம்! நின்புகழ் பேசினோம்!
புண்ணியா உன் பெருமைதனை விரல்கொண்டு எண்ணவோ?
எண்ணியா இச்செயலைச் செய்தான் ஓர் பாவி?
பண்ணிய செயலுக்குப் பிதாவே சாட்சியையா!

பன்னெடுங் காலமாகப் பதவியில் பற்று வைத்து,
இன்னரிய சேவைதனை இனிதே ஆற்றிநின்றீர்!
உன்னரிய பணியதனைப் பேசாதார் யாருண்டு?
என்னரிய அதிபரே! எனியெப்போதுனைக் காண்போம்?

கண்டபோது அழைத்து கருத்து விசாரித்து, நீர்
உண்ட விருந்தில் உறவாடி, உற்றது கேட்டு,
இண்டலும் விட்டு, பின வேண்டியது ஆற்றி,
கொண்டலென அறிவுரை சொரிந்து நின்றீரே!

எப்போதும் இனியமுகம், இன்சொல், நன்னோக்கு,
இப்போதும் நின ஆய்வுமொழி காதில் ஒலிக்குதையா!
முப்போதும் சலியாது தொடுத்த கருமமதை
அப்போது முடித்து அருமபயனைப் பெற்றீரே!

சனியன்று உயர்தர மாணவர் மன்றமதில் நீர்
தனிநின்று காதல்கவை சொட்டும் பழம்பாடல் பாடி
கனியின்று ரசமாய் பாய்ந்தோடுவது போல அமுதிசைத்தீர்
இனியென்று கேட்போம் நின் இன்னிசையை–அதிபரே!

அத்தனை மாணவர்க்கும் அன்று நல்லுரை எடுத்தியம்பினீர்
எத்தனை பொருள் பொதிந்த கருத்துக்கள் தரும் நின்
முத்தனைய மொழிகேட்க எதிர் நிற்கும் பலவாயிர மாணவர்
இத்தனை பேருக்கும் எதுகூறிப் போகின்றீர்? சொல்லும்!

மறக்க முடியுமா மனவேதனையை ஐயா! என்றும்
சிறக்க நின்ற நின்சீர் சோ தோற்றமதை?
இறக்க நினைக்குமுன் இறந்தநின் பொன்னுடலைப்
பறக்க வைத்தனனே! தறித்து விட்டனனே! வறிதே!

பெரும்புகழ் வாழுமையா! மாசுபட்ட நிலமங்கை
அரும் புதல்வனின் குருதிக்கறை நீக்கமாட்டாள்!
இரும்பொத்த கல்மனமும் உருகிக் குழையுமையா!
கரும்பொத்த சொல்லின் செல்வனே! கனவிலும் மறவோம்!

செந்தமிழ்ச் சிறார்கள் கரங்கூப்பி நிற்கின்றார்! ஐயா!
அந்தமில் நன்றிப்பெருக்கை உள்ளத்தில் பெருகவிட்டு,
சிந்தையில் செம்மலை எண்ணி செபம்செய்து தொடர்கின்றார்
எந்தை வாழ்க! வானுலகில் வாழ்க! என வாழ்த்தியே!

சாந்தி! சாந்தி! சாந்தி!

நன்றி மறவா உள்ளம்

### கடவுளின் பார்வையில் பொல்லாப்புச் செய்த இராஜாக்கள்

1. சவுல் — I சாமு. 15 : 11, 19
2. தாவீது — 2 சாமு. 11 : 27; 12 : 9
   (தாவீது அரசன் பின்பு மனந்திரும்பினான் – சங். 51; I இரா. 15 : 5)
3. சாலொமோன் — I இரா. 11 : 4, 6, 9, 10; நெகே. 13 : 26,
4. நாதாப் — I இரா. 15 : 25 — 28
5. பாஷா — I இரா. 15 : 33, 34.
6. உம்ரி — I இரா. 16 : 25.
7. ஆகாப் — I இரா. 16 : 30
8. அகசியா — 2 இரா. 8 : 26, 27
9. யெரொபெயாம் — 2 இரா. 14 : 23, 24
10. சகரியா — 2 இரா. 15 : 8, 9.
11. மெனாகேம் — 2 இரா. 15 : 17.
12. பெக்காகியா — 2 இரா. 15 : 23, 24.
13. பெக்கா — 2 இரா. 15 : 27, 28.
14. யோயாக்கீம் — 2 நாளா. 36 : 5.
15. ஆகாஸ் — 2 நாளா 28 : 1.
16. யோயாக்கீன் — 2. நாளா. 28 : 9
17. சிதேக்கியா — 2 நாளா. 28 : 11, 12,
18. ஆமோன் — 2 நாளா. 33 : 21, 22.

### இறைவனடி சேர்ந்தார்

கோண்டாவிலைச் சேர்ந்த டியூக் அல்பேர்ட் திருநேசசிங்கம் ஜோசெப் (இளைப்பாறிய கல்வி அதிகாரி) 19-6-85ஆல் காலமானார். இவர் மகிழ்மலரின் (இளைப்பாறிய ஆசிரியை, மானிப்பாய் மெமோரியல் கல்லூரி) அன்புக் கணவரும், மஞ்சுளா, வஜஜூளா, டில்ருக்ஷன் (கிறிஸ்தவ இறையியல் கழகம், சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவர் மானிப்பாய் C. S. I. திருச்சபையைச் சேர்ந்தவர்.

அன்னாரின் இறுதி ஆராதனை அவரது இல்லத்தில், அருள்திரு. S. J. சொலமன் அவர்களால், அருள்திரு. சாம் தம்பு, அருள்திரு. செல்வ சாம் அல்பிறட் ஆகியோரின் உதவியுடன் 22-6-85 காலை 9-00 மணிக்கு நடத்தப்பட்டது. அருள்திரு. டி. ஆர். அம்பலவாணர் இரங்கலுரை வழங்கினார். இணுவில் தாவடி கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்க ஆராதனை வண. சொலமன் அருள்திரு. T. S. பிரேமராஜா ஆகியோரால் நடத்தப்பட்டது.

## உங்களுக்குத் தெரியுமா ?

● உலகத்திலேயே மிகவும் அதிகமாக மழை பெய்யும் நாடு கொலம்பியா. இங்கு ஆண்டுக்கு 4099 மி. மீ. மழை பெய்கிறது!

● உலகத்திலேயே மிகவும் கனமான சக்தி வாய்ந்த பெரிய விமானம் 'ஜம்போ ஜெட்' என்ற அமெரிக்க போயிங் 747 விமானமாகும். இதனுடைய எடை 381 டன்! தற்போது உலகில் 313 ஜம்போ ஜெட் விமானங்கள் இயங்கி வருகின்றன.

● உலகத்திலேயே மிகவும் மக்கள் நெருக்கம் வாய்ந்த நாடு, மொனக்கோ. இங்கு ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 16,938 மக்கள் வசிக்கின்றனர்!

● உலகத்திலேயே மிக அதிக அளவு பெட்ரோலியம் தயாரிக்கும் நாடு சோவியத் ருஷ்யா. இங்கு ஆண்டொன்றுக்கு 52 கோடி டன் பெட்ரோலியம் தயாரிக்கப்படுகிறது. இங்கு ஒரு நாளில் தயாரிக்கப்படும் பெட்ரோலின் உதவியால் ஒரு கார் 126 தடவைகள் சூரியனுக்குச் சென்று வரமுடியும்!

● பிரான்ஸ் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்!

● அமெரிக்காவில் மட்டும் விநாடிக்கு 23,000 முட்டைகள் இடப்படுகின்றன.

● உலகத்திலேயே இரண்டாவது பெரியதும் ஆசியாவிலேயே மிகப் பெரியதுமான புத்தக விற்பனை நிலையம் பெங்களூரில் உள்ளது. இதிலுள்ள புத்தக அலுமாரிகளின் மொத்த நீளம் ஒரு கிலோ மீட்டர்! மொத்தம் 10 இலட்சம் புத்தகங்களை இதில் அடுக்கி வைக்கலாம்! உலகத்திலேயே மிகப் பெரிய புத்தக நிலையம் இலண்டனிலுள்ள பிளாக்வெல் புத்தக நிலையமாகும்.

## சிறுவர் பூங்கா

### முதல் முதல்

1. முதல் ஆங்கிலச் செய்தி பத்திரிகையான 'வீக்லி நியூஸ்' லண்டனில் 1622ஆம் ஆண்டு வெளியானது.

2. மிகப் பெரிய எரி நட்சத்திரக்கல் 'ஹோபா' (Hoba) தென் மேற்கு ஆப்பிரிக்காவில் விழுந்தது.

3. செய்தித்தாள்களில் அதிகப் பக்கங்கள் கொண்டது 'நியூயார்க் டைம்ஸ்'—1-12-'74 தேதியிட்ட அந்தப் பத்திரிகையில் 770 பக்கங்கள் இருந்தன.

4. செய்தித் தாள்களில் முதன் முதலில் கார்ட்டூன் போட்டது—சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில பத்திரிகை ஆரம்பித்தவர் — பெஞ்சமின் பிராங்களின்.

5. உலகிலேயே மிகப் பழமையான சர்வகலாசாலை, பேவியா சர்வகலாசாலை. கி. பி. 833இல் நிறுவப்பட்டது.

6. இந்தியாவிலேயே மிகப் பெரிய நூல் நிலையம்—கல்கத்தா தேசிய நூல் நிலையம்.

7. சதுரங்க விளையாட்டு முதல் முதலில தோன்றிய நாடு—இந்தியா.

8. முதல் முதலில் விசாகப்பட்டணத்தில கட்டிவிடப்பட்ட கப்பல் பெயர்—'ஜலஉஷா.'

9. இந்தியாவில் கல்கத்தாவில் முதல் பழம் பொருட்காட்சிச்சாலை அமைக்கப்பட்டது. 1796இல் நிறுவினர்கள்

10. பிரஞ்சு நாடுதான் முதல் முதலில் பீரங்கிப்படை அமைத்தது. 1350இல அமைக்கப்பட்டது.

11. இந்தியாவிலேயே பெண்களுக்கென வெளிவந்த முதல் மங்கையர் இதழ் — பம்பாயிலிருந்து 1858 ஆம் ஆண்டு வெளியான மாதர் பத்திரிகை — 'ஸ்ரீ போதா.'

— சேகரித்தவர் : ஜாய் ஆசீர்

## மறுமொழி தந்தார்

(சங்கீதம் 3ஐத் தழுவியது)

குரலை உயர்த்தி இறைவா என்றே — நான்
கூவி வழைத்தே ஓலமிட் டழுதேன்!
குருசைத் தாங்கும் குன்றி லிருந்து — தேவ
குமரன் கிறிஸ்து மறுமொழி தந்தார்!

தருந்த கேடகம் மகிமை யானார் — என்னை
தலைநிமிர்ந் தோங்கச் செய்தும் விட்டார்!
மிகுதியாய்ப் பகைவர் திரண்டெழுந்தாலும் — மீட்பர்
மீதில் சார்ந்தே மாண்புடன் வாழ்வேன்!
— குரலை உயர்த்தி இறைவா என்றே..

மீட்பை அருளும் ஆண்டவர் தாமே - என்னை
மேலும் தாங்குவார் அவர்கரத் தாலே!
ஆட்கொள்ளும் அன்பை அநுதினம் பொழிந்தே — புது
ஆசிகள் நலனும் பெருகிடச் செய்வார்!
— குரலை உயர்த்தி இறைவா என்றே...

— தயா

## சீனாவில் கிறிஸ்தவர்கள்

கிறிஸ்தவர்கள் சீனாவில் துன்புறுத்தப்பட்ட காலத்தில், அங்கிருந்த கிறிஸ்தவ சபை இரகசியமாக இயங்கி வந்தது முப்பது ஆண்டுகளாக வெளிநாடுகளில் மறைந்து வாழ்ந்த போதகர் ஸ்பே என்பவர், சீனாவில் சில ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட அரசாங்க மாற்றத்தின் பின், தன் கிராமத்திற்குத் திரும்பி வந்தார்.

அவரது தகப்பனார் கிறிஸ்தவனாயிருந்ததால் தலையை வெட்டி கொலை செய்யப்பட்டார். அவரது தாயார் 12 ஆண்டுகளைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். விடுதலை பெற்ற தாய் தன் மகனைக் கண்டு மகிழ்ந்தார். அந்த கிராமத்திலுள்ள 4000 பேரில் 3750 பேர் கிறிஸ்தவர்கள், 18 ஆண்டுகள் சிறையிலிருந்து பின்னர் விடுதலை பெற்ற போதகர் ஒருவர், அக்கிராமத்தில அடிக்கடி கூட்டங்கள் நடத்தி வந்தார். போதகர் ஸ்பேயின் பிரசங்கத்தைக் கேட்க ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கூடி வந்தனர். அக்கூட்டத்தில் இருந்த அரசாங்கத்தின் இரகசிய பொலீசாரின் மேலதிகாரி, அப்பிரசங்கத்தால கவரப்பட்டு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்.

அரசாங்க அனுமதி பெற்ற ஆலயங்களும் நிரம்பி வழிகின்றன, வாடிகன் அனுமதி பெறாத ரோமன் கத்தோலிக்க பேராயர் ப்யூவின் ஆலயத்திற்கு 6000 பேருக்கு மேற்பட்டோர் வருகின்றனர். மற்ற ஆலயங்களிலும் அநேகர் வழிபடுகின்றனர். கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் கழுத்தில போடும் சங்கிலிகளில சிலுவை அணிவதை சீன கம்யூனிஸ பத்திரிகைகள் கண்டித்தன.

கடவுள் சீனாவில் இன்று பலத்த கிரியைகளைச் செய்து வருகிறார். ஆலய வழிபாட்டின் மூலம அநேகர் கிறிஸ்துவைத் தமது மீட்பராக ஏற்றுவருகின்றனர். கிறிஸ்தவ சபை சீனாவில மறுமலர்ச்சி அடைந்துவரும் இக்காலத்தில், சபைகளைப் பிரிக்கும கிறிஸ்தவக் குழுக்களும அங்கு தீவிரமாக வேலை செய்து வருகின்றது. இதனால் அம்மக்கள் மலைப்படைந்து வருகின்றனர். எது உண்மைச் சபையென அறியாது திகைக்கின்றனர் என அறிகிறோம.

## செய்திகள்

### அதிபர் திரு. செல்லையா எட்வேர்ட் ஆனந்தராசா சுடப்பட்டு மரணமானர்!

யாழ். புனிதர் யோவான் கல்லூரி (St. Iohn's College) அதிபர் திரு. செ. எ. ஆனந்தராசா கடந்த புதன்கிழமை (26-6-85) மாலை 4.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டு மரணமானர். சுண்டிக்குளி றக்கா வீதி வழியாக அவர் தமது ஸ்கூட்டரில் தனியாக வந்துகொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றது. இவருக்கு இப்போ 58 வயது.

இவர், கோப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. G. S. செல்லையா அவர்களின் மகனாவார். இவரின் தந்தையார் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபராயிருந்தவர். திரு. ஆனந்தராசா சென். ஜோன்ஸ் கல்லூரியிலேயே படித்து ஆசிரியராகவும், உபஅதிபராகவும் கடமையாற்றி, கடந்த 10 ஆண்டு காலமாக அக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார். இவருக்கு மூன்று பெண் பிள்ளைகளும இரண்டு ஆண் பிள்ளைகளும் இருக்கிறார்கள.

அதிபர் ஆனந்தராசா தமது கல்லூரியில் தலைவலமற்ற தனிப்பெருஞ் சேவையைச் செய்து வந்தார். தமது திருச்சபையின காரியங்களிலும ஈடுபட்டு வேண்டிய உதவிகளை புரிந்து வந்தார். சமூகத்திலும் பல குடும்பங்களுக்குப் பேருதவியளித்து வந்தார். யாழ். மாணவரின் கல்விப் பயிற்சிக்காக அயராது உழைத்து வந்தார். கிறிஸ்தவ சாகியம் மட்டுமல்ல, யாழ். சமுதாயமே இவரைத் தம தனிப்பெரும் தலைவராக மதித்து வந்தது. இவரின் மரணம யாழ். மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும.

### பனையின் இன விருத்தி

யாழ். பல்கலைக் கழக தாவரவியல் பரிசோதனைக்கூடத்தில, பரிசோதனைக் குழாய் வளர்ப்பு முறையில் குட்டையான பனை மரங்களை இனவிருத்தி செய்துள்ளனர். இவ்வாராய்ச்சியின் மூலமாக, தென்னை பனை போன்ற 'Palm' குடும்ப தாவரங்களைப் பரிசோதனைக் குழாய் வளர்ப்பு முறையில் இன விருத்தி செய்ய லாமென அறிவிக்கப்படுகிறது.

## செய்தித் திரட்டு

○ இந்தியாவில் உள்ளது போன்ற மாநில சுயாட்சி முறையே இலங்கைப் பிரச்னைக்கும் தீர்வாக அமைய வேண்டுமென்பதே இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கருத்தாகும்.

## அன்னம் அக்காவுக்கு அஞ்சலி!

வில்லியம் என்னும் விருட்சத்தில்
விரிந்த அன்னமாகிய மலரது
அள்ளி எறிந்த அன்பு நாற்றுக்களை
உள்ளமதில் விளைவித்துக்
கொண்டோம்
கிள்ளப்பட்டது மலரே தவிர
விளைந்த நாற்றல்ல.

அல்லும் பகலும் உழைத்து
நல்லவற்றை குறைவின்றிக் கற்பித்து
சொல் வித்தகரை உருவாக்கிய-உன்
கல்வியும் வலிமையாகிய கடமை
உணர்வை
நானிலம் எங்கும் கூறிடுவோம்
உன் சொற்கள் அடங்கின
சொல் வித்தகர்கள் அடங்கிலர்.

ஐபன்னிரண்டு மாதங்கள்
சீர்குலைந்த பெற்றோரை
ஊர் போற்றிட ஒற்றுமையாய்
நீர் செய்த ஊழியத்தை
உதாரணமாக்கி நாம் வாழ்வோம்
உடைந்தது அன்னமாகி பாத்திரம்
ஊட்டிவிட்ட பெற்றோர் பாசமல்ல.

காலை ஆராதனைக்கு
கால் நடையாய்
களைப்பின்றி நடக்கும்
கள்ளமில்லா உள்ளமுள்ள
கருத்துணர்வை நாம் மறவோம்
கண்முன்னே மறைந்தது உன்உருவம்
கருத்தில் நிறைந்தது உன்சிந்தை.

சமயக் கொண்டாட்டங்களா
சம்பிரதாய விழாக்களா-முழு
சம்மதம் தந்து ஊக்குவிக்கும்
சாந்தமான இதயமதை நாம்மறவோம்
சிதைந்தது உடலே ஒழிய
சீரிய இதயமல்ல

ஐபத்து ஆண்டுகள் காத்த திருக்கரம்
அணைத்தது உன்னை இணைந்தாய்
அதற்குள்
துணை உனக்கு இல்லை என்று
நாம் துடித்தோம்
தூய துணைக்குள்ளே பிணைந்து
கொண்டாய்
சிரித்தே வாழ்ந்தாய் இவ்வுலகில்—
என்றும்
சிரித்தே வாழ்வாய் அவ்வுலகில்.

— தேவானந் பேசுதாசன்
[மாணவன்]

○ இருபத்தாறு வயதான செல்வி ரெமி ஜேர்னிகன் என்ற இளம்பெண், உலகிலேயே வயது குறைந்த விண்வெளிப் பயணியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

○ தமிழ் நாட்டை (சென்னை) சேர்ந்த இளைஞர் பாஸ்கரன், உலகில் உள்ள 108 நாடுகளுக்கு சைக்கிளில் பயணம் செய்ய விரைவில் தொடங்கவிருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் தம் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு 1989 ஆம் ஆண்டளவில தம் தாயகம் திருப்பத் திட்டமிட்டுள்ளார்.

○ யாழ். மாநகரசபையின் பாவனைக்கென கனடாவிலிருந்து விசேஷமாகத் தருவிக்கப்பட்ட நவீன தீயணைப்பு இயந்திரம கடந்த வாரம் யாழ். நகர் வந்து சேர்ந்தது.

○ தமிழ் நாடு இராமநாதபுரம் உச்சிறடி சிவில் விமான நிலையம் இராணுவ விமான நிலையமாக மாற்றப்படவுள்ளது. இராமநாதபுரம் பகுதியில ஏற்பட்டு வரும் பதட்டநிலையைக் கருத்திற் கொண்டே இந்த ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகத் தெரிகிறது

○ இலங்கையில தற்போது ஏற்பட்டுள்ள போர் நிறுத்தம் இந்திய ராஜதந்திர நடவடிக்கைக்கு ஒரு வெற்றியென தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் சென்னையில் கடந்த வாரம் அறிவித்துள்ளார்.

## திருவாசகமும் கிறிஸ்து சமய உண்மைகளும்

— (அமரர் K. E. மதியாபரணம் அவர்களால் எழுதப்பட்டது) —

(முற்றொடர்)

'கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை கண்டபின்' என்று மணிவாசகர் தம்மைக் குறித்துக் கூறும் போது, அவர் தம்மை எத்துணை தாழ்த்தினார் என்பது தெற்றெனப் புலப்படும். இவ்வுவமையை இலக்கணகாரர் மறுதலையுவமம் என்பர். அன்பை நிறைகோலில் நிறுக்க முடியுமெனின், கண்ணப்பனுக்குச் சமமான அன்பு இருக்குமாகில், தமக்குச் சற்று ஒரிருத்தல் அன்பு உண்டு என்கின்றனர் இவ்வடியார். 'கண்ணப்பனுக்கு எத்துணை அன்புண்டோ அத்துணை அன்பின்மை எனக்குண்டு' என்கின்றனர் இவர். கண்ணப்பன் ஒழுக்க நலமற்ற, கல்வியறிவில்லாத கொலை பாதகனாகிய வேடனுவான். மணிவாசகரோ பல்வேறு கல்வித் துறைகளிலும் நிரம்ப மூழ்கி, அறிவு நிறையப் பெற்று, ஒழுக்க நலஞ்சிறந்த பாண்டிய அரசரின் மந்திரியாவார். உலகத்தில் அவர் அவ்வித உயர்ச்சி பெற்றிருந்தும், கண்ணப்பன் இழிவான வேடன் என்பதை நோக்காது தம்மை மிகவுந் தாழ்ந்த நிலையில் வைத்துக் கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை கண்டபின் என்றனர்.

இவ்வாறு அவர் கூறியதன் காரணம் மாற்றிப்பிறந்தவனாகிய கண்ணப்பன் அதேயனுபவம் பெற்றிருந்த தம்மினும் பார்க்க இறைவனன்பில் மூழ்கித்திளைத்திருந்தான் என்பதைத்தாம் நன்குணர்ந்ததேயாகும் என்று சொல்லாமலே விளங்கும். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராச்சியம் அவர்களுடையது." (மத். 5:3). இது இயேசு பெருமான் கூறிய மலைப்பிரசங்கக்கூற்றுக்களிலொன்று. இதனைச் சைவர்கள் விளங்கும் உரையிற்கூறின், பூரண தாழ்மையுடையவனே வாழ்க்கையிற்றூய்மை அடைந்து வீடு பெறுவான். தாழ்மையென்னும் பாடத்தை ஆண்டவராகிய இயேசு இவ்வுலகிலிருந்தபோது சீஷருக்குப் பலமுறை படிப்பிக்க வேண்டியிருந்தது. கடைசி இரவிலுங்கூட அதனைப் படிப்பித்தனர். அன்று அவர் அதனைச் சொல்லவிலுஞ் செயலவிலும் காட்டினர். அவர் சிலுவையில் அறையுண்டதற்கு முதலிரவு சீஷர்களுடன் ஒரு பந்தியிலிருந்து இராப்போசனஞ் செய்தார். யூதர் விருந்துகளில் உண்பதற்குமுன் வேலையாள் ஒருவன் விருந்தாளிகளுடைய கால்களைக் கழுவவேண்டும். இயேசுவுக்குஞ் சீஷருக்கும் வேலையாள் இல்லாதபடியின், சீஷருள் ஒருவனே கழுவவேண்டியிருந்தது. அவர்களுள் ஒருவரும் அதைச் செய்ய விரும்பாமையின், பந்தியிலிருந்தவராகிய கிறிஸ்து தாமே எழுந்து போய்த்தண்ணீர் எடுத்து அவர்கள் ஒவ்வொருவருடைய காலையுங் கழுவினார். கழுவியபின் தாழ்மையைக் குறித்து அவர்களுக்குப் போதித்தனர். இதனை வரலாற்றை விவிலிய வேதத்தில் யோவான் எழுதிய சுவிசேஷம் 13-ம் அதிகாரத்திற் படித்தறிந்து கொள்க.

மணிவாசகரது தாழ்மையென்னுஞ் சிறந்த இயல்பிலிருந்து பிரிக்கமுடியாத இன்னொரு குணம் மேற்கூறியது போல ஆழமான பாவ உணர்ச்சியாகும். இவ்வாறான பாவ உணர்ச்சியற்றவன் ஒருபோதும் வாழ்க்கையில் தூய்மையடைந்து ஈடேற முடியாது. பசியுள்ளவனே உண்ணமுடியும். "நீதியின் மேற்பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" (மத். 5:6) என்பது ஆண்டவர் இயேசுவின் வாக்காகும். மேற்கூறிய சைவ அடியார் தம் பாவத்தை யுணர்ந்து நீதியின் மேற்பசிதாகமாயிருந்தார். தம்மைப் பெரிதுங் கவர்ந்து கொண்டதும் விடமுடியாததுமாகிய பெண்ணாசை முதலிய பாவத்தினின்றும் அறவே நீங்கித் தூய்மை அடைந்து வீடடையவேண்டுமென்று பெரிதும் விழைந்தனர். அதனையறிந்த இறைவன் திருப்பெருந்துறையிற் காட்சியளித்து அவரை முழுவதும் மாற்றி உலக ஆசைகளை மறக்கப்பண்ணினர். பாவ உணர்ச்சியுள்ளவர்களுடைய இருதயந்தூய்மைப்படுவதற்கு இறைவன் அருள்புரிகின்றனர். இருதயந்தூய்மைப்படுபவன் இறைவனைக் கண்டடைகின்றான். "இருதயத்திற் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." (மத். 5:8)

"கொள்ளேர் பிளவகலாத் தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய் விள்ளேனெனினும் விடுதிகண்டாய்" "காருறு கண்ணியரைம்புல னாற்றங் கரை மரமாய், வேருறுவேனை விடுதி" "புலையனேனையும் பொருளென நினைந்து" "நாயிற் கடைப்பட்ட நம்மையும்" "மத்துறு தண்டயிரிற் புலன் நீக்கதுவ" இவ்வாறு தம் பாவங்கள் யாவற்றையும் ஒவ்வொன்றாக உணர்ந்து கண்ணீர் விட்டழுதனர் மணிவாசகனார். அழுதது மட்டுமன்று உலகிலுள்ள யாவரும் எக்காலத்திலும் அறியுமாறு திருவாசகம் என்னுந் தமது நூலில் அவைகள் ஒவ்வொன்றையும் தெளிவாகக் கூறி வைத்துள்ளனர். இச்சைவ அடியாரைப்போலவே விவிலிய வேதத்திற் கூறப்படும் கிறிஸ்த அடியார் யாவரும் ஆழ்ந்த பாவ உணர்ச்சியுடையவராயிருந்தனர்

எடுத்துக்காட்டாக, ஓரடியானுடைய வாழ்க்கை வரலாற்றை ஆராயின், இவ்வுண்மை விளங்கும். தாவீது என்னும் அரசன் எல்லா யூதராலும் நன்கு மதிக்கப்பட்டவனுவான். ஆனால் பெண்ணாசையிலிருந்து முற்றும் நீங்காதவனாயிருந்தான், அவனுக்குப் பல மனைவிகளிருந்தபோதிலும், அவனுடைய யுத்தவீரரில் ஒருவனுடைய ஒரேயொரு மனைவியில் மோகங்கொண்டு யுத்தத்தில் அவனைச் சேனையின் முன்னணியில விடுத்துக்கொல்வித்தான். அதையறிந்த கர்த்தர் தம தீர்க்கதரிசிகளிலொருவனை அனுப்பி அக்குற்றத்தின் பாரதூரத்தை அவனுக்கு அறிவித்தனர். அவன் கண்ணீர் விட்டழுது, 51-ம் சங்கீதத்தில் தன் பாவ உணர்ச்சியை அறிவிக்கின்றான். "என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும். உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்." (சங். 51:3, 4, 10, 11) வேதத்தில் 2-ம் சாமுவேல் என்னும் புத்தகத்தில் 11-ம், 12-ம் அதிகாரத்தில் தாவீது செய்த மேற்குறித்த பொல்லாங்கான பாவத்தின் வரலாற்றைப்படித்தறியலாம்.

இவ்வுண்மையை உறுதிப்படுத்துவதற்கு இன்றோர் எடுத்துக்காட்டைக் கூறலாம். புதியேற்பாட்டிற் பல நூல்களை எழுதிய பவுல் அப்போஸ்தலனும், மாணிக்கவாசகரையும் தாவீதையும் போன்று ஆழ்ந்த பாவ உணர்ச்சியுடையவனாய் இருந்தான். அவனும் மேற்கூறிய சைவ அடியாரைப்போன்று கல்வியறிவு நிறைந்தவனாய் நல்லொழுக்கம் உடையவனாய் விளங்கினன். எனினும், தமஸ்குவுக்குப் போகும் வழியில் ஆண்டவராகிய இயேசு காட்சியளித்தபோது மறுபடியும் பிறக்கும் அநுபவத்தைப்பெற்று அதன்பின் தன் குற்றங்களை உணர்ந்து குறிப்பிடும்போது "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். அவர்களிற் பிரதான பாவி நான்" என்கிறார் (1 தீமோ. 1:15)

## உனக்கும் எனக்கும் பேச்சில்லை .... போ!

— எஸ். எஸ். சீலன் எட்வேட்ஸ் —

**கிறிஸ்தியான்** — யாரையா நீ? எங்கிருந்து வருகிறாய்! உன் முகம் அகோரமாய் இருக்கிறதே! 'உன் பெயர் என்ன' தொழில் என்ன?

**சாத்தான்** — நான் உலகத்தின் அதிபதி. நான் உலகத்தில் இருக்கிறேன், என் பெயர் சாத்தான். என்தொழில் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித்திரிவது.

**கிறிஸ்தியான்** — இதற்கு முன்னே நீ எங்கேயிருந்தாய்.

**சாத்தான்** — நான் பரலோகத்தில் இருந்தேன்.

**கிறிஸ்தியான்** — அங்கு என்ன செய்து கொண்டிருந்தாய்?

**சாத்தான்** — நான் கர்த்தரைப் போற்றித்துதித்து வணங்கி பணிவிடை செய்து கொண்டிருக்கும் எண்ணில்லா தேவதூதர்களுக்குத் தலைவனாயிருந்தேன். கடவுள் அவரைப்போல எனக்கு சகல வல்லமையையும் கொடுத்திருந்தார். அந்த வல்லமை இன்னும் எனக்கிருக்கிறது.

**கிறிஸ்தியான்** — பின்னை ஏன் உலகத்தில் திரிகிறாய்?

**சாத்தான்** — நானும் கடவுளைப் போல என்னை உயர்த்தி அவரைப்போல இருக்க எண்ணினேன்.

**கிறிஸ்தியான்** — தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். இது உனக்குத் தெரியாதா நீ பெருமையுள்ளவனானாயோ?

**சாத்தான்** — அதுதான் நடந்தது. என்னை விழத்தள்ளிப் போட்டார். நான் விழுந்துபோன தூதனானேன். (ஏசாயா 14:14)

**கிறிஸ்தியான்** — அதுதான் நீ பூமியில் வந்து உன் வல்லமையை உபயோகிக்கிறாயோ? நீ கெட்டுப்போனது மல்லாமல் அவருடைய ஜனங்களையும் கெடுக்கிறாயோ!

**சாத்தான்** — அதுதான் என் வேலை. முதலாவது அவர் ஆதாம் ஏவாளை உண்டாக்கி ஏதேன் என்னும் சிங்கார தோட்டத்தில் வைத்தார். அங்கே கடவுள் அவர்களுக்குக் கொடுத்த கட்டளை நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைத் தவிர மற்றெல்லா மரங்களின் கனிகளையும் புசிக்கலாம். அந்த மரத்தின் கனியைப் புசித்தால் சாவீர்கள் என்பது. நான் பாம்புக்குள் புகுந்து ஏவாளிடம் பேசினேன். பாவத்தை செய்து துரத்தப்பட்டார்கள்.

**கிறிஸ்தியான்** — வேறு என்ன செய்திருக்கிறாய்.

**சாத்தான்** — காயீனை தன் சகோதரனாகிய ஆபேலைக் கொலை செய்ய வைத்தேன். ஜனங்கள் தேவனை நோக்கி ஜெபிக்காதபடி கல், மண், சிலைகளை வணங்கச் செய்தேன். ஜனங்கள் இப்பவும் அப்படி விக்கிரகங்களை வணங்குகிறார்கள். யூதாஸ் காரியோத்துக்குள் புகுந்து அவரைக் காட்டிக் கொடுத்தேன். அவனை நான்று கொண்டு சாகச் செய்தேன். இயேசுவை சிலுவையிலிருந்து இறங்கிவரச் சொன்னேன். அவர் வரவில்லை. அவர் பிறந்ததிலிருந்து சிலுவை மரணம் வரை அவரை சோதித்தேன். அவர் மரித்து உயிர்த்தெழுந்து பரலோகத்திலிருக்கிறார்.

**கிறிஸ்தியான்** — நரகத்திற்கு அதிகாரியோ நீ?

**சாத்தான்** — சத்தியமாக நான் தான் நரகத்தின் அதிபதி.

**கிறிஸ்தியான்** — இயேசு உலகத்தை நியாயம் தீர்க்க வருவார் நல்லவர்களுக்கு மோட்சம் கெட்டவர்களுக்கு உன்னிடமுள்ள நரகம் கிடைக்கும், இனி உனக்கும் எனக்கும் பேச்சில்லை அப்பாலே போ சாத்தானே. நான் இயேசுராஜாவின் பிள்ளை,

---

### தியானம்

## உதவி செய்யும் கரங்கள்

"இவர்கள் தங்கள் பொருள்களைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்."

— லூக்கா. 8:3.

ஓர் அரண்மனையில் மூன்று இளம்பெண்கள் வசித்து வந்தார்கள். ஒரு நாள் அழகிய அரண்மனை நந்தவனத்தில் அவர்கள் உலாவிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்களிடையே யாருக்கு அழகிய கரங்கள் இருக்கின்றன என்று விவாதம் எழுந்தது. அழுதா தன்னுடைய வெண்ணிற விரல்களைப் பார்த்துத் தான் அழகி என்று தன்னையே மெச்சிக் கொண்டாள்.

ரோஜா மலர்களைக் கொய்து கொண்டிருந்த குமுதா தன்னுடைய கரங்கள் ரோஜா மலரைப் போல இருக்கின்றன என்று பெருமைப்பட்டுக் கொண்டாள். மூன்றாமவள் சந்திரா தனது கரங்களால் நீரோடையை அளைந்தாள். செந்நிற சூரிய ஒளியில் அவளது கரங்கள் பளபளத்தன.

அவ்வேளையில் ஓர் ஏழைச் சிறுமி பிச்சை கேட்டுக்கொண்டு அங்கு வந்தாள். அருவருப்பால் முகத்தைச் சுளித்து மூவரும் ஒதுங்கிக் கொண்டார்கள். அச்சிறுமி அருகிலிருந்த குடிசை ஒன்றில் சென்று பிச்சை கேட்டாள். வாடி வதங்கிய தோற்றமுடைய பெண்மணி வெளியே வந்து தனது சூம்பிய கரங்களால் பிச்சையிட்டாள். அந்தப் பிச்சைக்காரச் சிறுமி திடீரென்று ஒரு தேவதையாக உருமாறினாள். 'உதவி செய்யும் கரங்களே உலகில் மிகவும் அழகான கரங்கள்' - என்று கூறி விட்டு மறைந்தாள்!

செபம்: இறைவா, என்னுடைய கரங்களை எடுத்து உமதன்பின் அலுவல்களை இயக்கியருளும்.

— ஆமென்.

*Appreciation*

**Dr. Paul Gnanothayam Somasundaram**

A pall of gloom rested on the village of Nallur on Friday 1st June 1985 when *Paul Gnanothayam Somasundaram* familiarly known to those who were close to him as (Gnanar) breathed his last. He was a son of the late Canon & Mrs. Somasundaram. Born on the 13th January, 1922 his early childhood was opent at Somasundaram Lane, Chundiculi and later the family moved on to the Parsonage at St. James Church, Nallur. Gnanar had his entire education from the primary class to the London Matriculation at St. John's College from where he matriculated in 1939. The same year he passed his entrance examination to the Ceylon Medical College and completed his course successfully. He served the Government in various parts of the island viz., Galle, Matale, Mulakale, Nawalapitiya, Mutur, and Mullaitivu as D. M. O. In 1957 he proceeded to U. K. to specialize in tropical Diseases. He completed his studies but just before his Examination he had to undergo a serious nerve operation and was therefore unable to sit for the examination. His wife Joan had to rush to London from Ceylon to be with him and nurse him. Though he recovered, he partially lost his physical balance on one side, and was compelled to take up an appointment at the M. R. I. Colombo. This did not give him satisfaction because Gnanar's chief interest was not Laboratory work but dealing personally with patients. Consequently he retired from Government service in 1964, and returned to Jaffna, renting the St. James Parsonage and fully got involved in Private Practice. It was here that he spent his childhood days. When the Church decided to sell the Parsonage and compound in accordance with the regulations then in force he purchased it from the church.

Gnanar was well known for his stewardship in the Church and steadastness in the Anglican traditions. He served as the vicar's warden some year back and he went about his work unobtrusively and without any fuss or bother. He was strict but kind with his patients and endeared himself to all those who came in contact with him. His compassion for those around him and the appreciation of good persons and things helped him not only to be their family doctor but also to develop a wonderful sense of cordiality which knew no limitations. This esprit de-corps grew daily especially amongst those who regularly called at his home to collect their drinking water. Gnanar's home was the spout of their life, and his laugh was a tonic to their ailments. He was a simple man and not given to luxurious living. He boldly condemned pretentions of any sort. His is a severe loss to the entire community at Nallur.

May his soul rest softly on the earth on which he was laid and the good Lord console those who bemoan the loss.

**Sam S Sathaseevan.**

The funeral took place on Sunday 2nd June, 1985 at 3 p. m. The Service at the residence was conducted by Ven. Sam D. Horshington Vicar, St. James Church, Nallur and assisted by Revd. J. Sarvananthan, Rev. S. P. K. Solomons, and Sevak Rev Sam Alfred. The tribute was paid by Revd. J. Sarvananthan. The Last comittal rites were performed by Ven. Horshington and Sevak Rev. Sam Alfred.

He leaves behind his wife Joan, Mr. and Mrs. Baski Somasunderam (Son and Daughter in Law), Visva and Pathmini (Son in Law and daughter) and Ravi Somasunderam (son) and a host of friends and relations to bemoan his loss.

---

*University Admission*

## University Don Advocates a Two-tier System of Examination

The selection process to the Universities should accordingly be changed with due credit being given to attitudes and general proficiency in addition to academic performance. I would very much like to see a two tier system of examination for selection to the Universities, particularly to professional courses like Medicine. The first tier could be the present G. C. E. adv. level examination based solely on academic performance. The students could then be selected on the basis of a qualifying mark which however should certainly be much higher than the present mark of 180. This point of 180 was selected several years ago when the marking schemes were much different than the present system of objective evaluation with Multiple Choice Questions and Structured Essay questions. The qualifying mark should be well over 200 in the present context. The selected students should then undergo a second examination which should include among others, test for general aptitude, intelligence and general knowledge. Excellent tools have now been designed by psychologists to asses these component fairly objectively. The reintroduction of a Viva Voce should be considered. No doubt critics would argue that this had in the post resulted in the abuse of the selection process but I believe that the abuses are not the rule but rather the exception and are certainly less than the gross abuses that go on today when an unlimited number of candidates take up examinations like the G. C. E. A/L in an unlimited number of centres. The abuses could be further minimiced by handing over the conduct of the second examination to the respective Universities. This process would certainly screen the input to the Uuiversities and would greatly reduce the entry — usually a small number but occasionally a significant number — of students with no aptitude at all for higher education. Merit and merit alone should be the criterion for admission to the Universities but merit should not be confined to academic performance alone but should be used in the wider sense. Certainly a defined number of places could and should be reserved for genuinely bright students from underprivileged schools (rather than underprivileged areas) but such wide discrepancies where a student from one area is admitted to the medical school with a score as low as 172 while students from Colleges like yours are refused admission with aggregates well over 250 are totally unacceptable.

The need to include the evaluation of attitudes in University particularly medical school examinations cannot be overemphasised. At the moment, except in a few disciplines which exercise an in-course system of assessment of attitudes, the bulk of the scoring remains for objective measurements of knowledge and practical skills. However, academic merit alone would be of no value in the production of dedicated members of the medical profession if proper attention is not paid to the development and evaluation of attitudes — attitudes towards colleagues and towards society at large.

It is therefore my contention that the first arm of educational reform should be towards the inclusion of measurement systems, however non objective these may be, for the evalution of certain defined qualities and attributes at the Collegiate, pre University and University levels.

The second prong in educational reform should be the change in style of imparting academic knowledge and skills, both at the Collegiate level as well as in the Universities. Our educational system and examination processes are heavily *content oriented*. In this era of information explosion, particularly in the natural and applied sciences, it is difficult if not impossible for any student or for that matter for any teacher to keep pace with the expanding volume of knowledge. Therefore, the approach should be directed towards a concept *oriented* educational system, whereby principles, methodology, models and concepts are learnt across disciplines and subjects rather than accumulated content knowledge. Dewey, as early as 1910, and "science has been taught too much as an accumulation of ready made material with which students are to be made familiar, enough as a method of thinking, an attitude of "mind". Unfortunately, in many instances this applies even today — sadly even at the University level.

Once concepts are understood, content could always be obtained by referal to the libraries and other learning aids. In order to do so, students should be trained and encouraged in *self-directed learning*. Lectures and ready made notes should become a thing of the past or at least minimiced. I quote from one of the pioneer medical educationists, Abraham Flexner who said as early as 1910 "In methods of instructions out and out didactic treatment is hopelessly antiquated; it belongs to an age of accepted dogma or supposedly complete information when the Professor 'knew' and the students 'learned'.

However, the question of self directed learning raises the problem of the use of English as a language of communication. We see today in our medical schools, some students who do not even have a working knowledge of basic English. How then could they be involved in any meaningful self learning? It is therefore imperative that at least for the Professional courses a working knowledge of English should be made a prerequisite for admission.

Tutories, the enigma of the educational system in our society today, flourish because the system helps them to flourish. Legal reforms to ban tutories as proclaimed by many educationists are unnecessary. What we need are educational reforms in the two directions that I have proposed and I am certain that by the laws of natural selection and evolution, the tutories and the didactic system of learning would have a natural death. Let us resolve as in the words of Comenius, a 17th century educationist "To seek and to find a method of instruction, by which teachers may teach less but learners may learn more; by which schools may be the scene of less noise, aversion and useless labour but of more leisure, enjoyment and solid progress". It is this wider aspect of education that Thiruvalluvar has explicitly quoted in many of his Kurals:

"தொட்டனைத் தூறு மணற்கேணி
மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி
ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து."

"கேடில் விழுச்செல்வங் கல்வி
யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."

---

### St. John's College

We regret to record the death which occured under tragic circumstances on Wednesday, 26-6-85 of *Mr. C. E. Anandarajan*, Principal of St. John's College, Jaffna.

A fuller account will follow in our next issue.

---

*Atchuvely Church*

**Miss Annaratnam William**

We regret to record the death of *Annaratnam William* daughter of the late Mr. William and Mrs. William of Atchuvely which occurred in the General Hospital Colombo.

The Funeral Service took place at Atchuvely on 23-6-85 at 9.30 a.m. Miss William who was on the Staff of the Atchuvely Convent was greatly loved and esteemed by her pupils and colleagues. She is a grand daughter of the late Rev. Velluppillai and Mrs. Velluppillai of the JDCSI. She was also an active member of the Church.

Rev. S. P. Jeyasingam assisted by Rev. S. Manopavan conducted the Funeral Service and officiated at the committal rites at the Atchuvely Church burial grounds.

The deceased leaves behind a brother Selvarajah and four sisters, Pooranam, Gnanasothy, Selvarane and Shanty.

*EDITORIAL*

## The Journey to Peace

It is sad to reflect that within a few days of the cessation of hostilities announced by the government on 18-6-85, Jaffna was plunged in darkness over the loss, allegedly of political violence of one of its leading educationists, Mr. C. E Anandarajan, who, as a civilian leader had put his best foot forward to help the distressed in the violence-drenched 'fields' of the North.

Human life in Jaffna appears to be now suspended on a dread web of horror. Without a firm resolve on both sides, (the government and the militants) to douse the flames without any traces of burning embers, the "cessation of hostilities" sounds wildly unreal.

Overall, the mood may be optimistic. Trains are running right up to Kankesanthurai on rails, with their sabots in place. Buses are being put back on their routes with fuel supplied by the government. Shop keepers are having their doors wide open with confidence that nothing untoward would happen.

But, 'cessation of hostilities' and efforts (however well-meaning) to create a climate of harmony without a clearer vision of the 'distant dawn' could very well muddle the picture.

In any event, the local civilian population of the North has had its strength and power of endurance tested too long and too far by wooden and unnegotiating policies at summit level which have had grave consequences at the grass root level.

Signs however are not wanting that there would be no repetition of this in future. The following is an extract from an article entitled "*Peace Process gets underway*" in the CDN of 22-6-85.

"The Indian government's call to the terrorists to halt activities has been negotiated by Kumar Mangalam, a young Tamil Nadu Lok Sabha Representative and a close friend of Ra(iv Gandhi. He is the Congress (I) sentinel in Tamil Nadu as well as their link man with New Delhi.

That the government of Sri Lanka has agreed to invite the 'terrorists' for talks, as a reciprocatory gesture, is a light we unmistakably see at the end of the tunnel.

But at whatever level the talks are held, it is now clear that the twentyseven lakhs of Tamils in the country and the seven lakhs in the North, with the scars of the past still raw, are not looking only for generous hand-outs or carrot-and stick tactics.

There need be no pre-occupation now with the success of the talks or with the purported contents of the blue-print the government has prepared. There is only one measure of success. In Ben Jonson's words, "*As we brew, so shall we drink*".

## Party Leaders on Peace Talks Following the Cessation of Hostilities

**LSSP Leader, Dr. Colvin R. de Silva**

Those who said they would combat terrorism by military action were now going to have talks with the terrorists. It was their three parties (SLMP, LSSP and CP), which first called for a dialogue with the terrorists.

If the government failed to find a solution to the ethnic problem in these 18 weeks, it would mean destroying the last opportunity to save Sri Lanka.

**SLMP Leader, Mr. T. B. Illangaratne**

As much as the terrorists hove been asked to lay down their arms, the government should ask the M. Ps to lay down their weapons. It appeared that the SLFP lost their opportunity of speaking in Parliament. That was their stance. Such running away had taken place earlier too.

**Communist Party Leader, Mr. Peter Keuneman**

Their three parties (SLMP, LSSP and CP) were glad that the civil war which has lasted over one year had at last temporarily ended.

The SLFP's destructive attitude was responsible for no benefit being gained from the All-party talks. The SLFP suggestion to invite the TULF to the APC was supported by the CP. But the SLFP left even before the talks could be properly started and should take the responsibility for the talk's failure.

**Militant Leader on Cease-fire**

According to a report of the PTI of India, Veluppillai Prabakaran leader of the LTTE group has said, his group will honour the ceasefire for 12 weeks out of respect for India's mediation. The LTTE is one of the five groups which has accepted a cessation of hostilities.

**The President's Statement**

"Come what come may, support or opposition, before the end of this year I hope to see an end to the plague, (terrorism and 'Eelam') that has harmed this country and its people for several years."

**SLFP Member of Parliament, Mr. S. D. Bandaranayake**

Prime Minister Thrtcher can come and tell us that democracy cannot servive unless and until terrorism is eliminated. But the people of this country have found that terrorism is spreading as a result of the Westminister type of democracy thrust on this country by Britain. Prime Minister Bandaranayake was assasinhted in 1959 because of this system. This Parliamentary system has denied 49 per cent of the people in the country in the opposition parties and sent the young Bhikkus to roof tops in the universities today.

## Social Action Litigation

[An Experiment in India]

Today we find in third world countries a large number of interest groups being subjected to exploitation, injustice and even violence and in this climate judges have to play a positive role and they cannot content themselves by invoking the doctrines of self-restraint and passive interpretation.

The summit judiciary in India keenly alive to its social responsibility and accountability to the people has liberated itself from the shackles of Western thought-ways and made innovative use of the power of judicial review and forged new tools, devised new methods and fashioned new strategies for the purpose of reaching justice to socially and economically disadvantaged groups.

In essence, much of social action litigation focuses on expose of exploitation of the disadvantaged and deprivation of their rights and entitlements by the vested interests, administrative deviance and repression of vulnerable and under-previledged groups by the agencies of the State and other custodial authorities.

It also seeks to ensure that the authorities of the State fulfil the obligations of law under which they exist and function.

The Supreme Court found that the main obstacle which deprived the poor and the disadvantaged of effective access to justice was the traditional rule of *locus standi* which insists that only a person who has suffered a specific legal injury by reason of actual or threatened violation of his legal rights or legally protested interest can bring an action for judicial redress.

It is only the holder of the right who can sue for actual or threatened violation of such right and no other person can file an action to vindicate such right.

The Supreme Court therefore took the view that it was necessary to depart from the traditional rule of *local standi* and to broaden access to justice by providing that where a legal wrong or a legal injury is caused to a person or to a class of persons by reason of violating of their constitutional or legal rights and such person or class of persons is by reason of poverty or disability or socially or economically disadvantaged position unable to approach the Court for relief, any member of the public or social action group acting bona fide can maintain an application in the High Court or the Supreme Court seeking judicial redress for the legal wrong or injury caused to such person or class of persons.

The Supreme Court thus evolved what has come to be known as epistolary jurisdiction where the Court can be moved by just addressing a letter on behalf of the disadvantaged class of persons. This was a major breakthrough achieved by the Supreme Court in bringing justice closer to the large masses of the people.

Now for the first time the portals of the court were thrown open to the poor and the down trodden, the ignorant and the illiterate with the result that their cases started coming before the court through social action litigation. The have-nots and the handicapped began to feel for the first time that there was an institution to which they could turn for redress against exploitation and injustice.

Tho Supreme Court became a symbol of hope for the deprived and vulnerable sections of India Humanity.

[Excerpts from an Address delivered by the Indian Chief Justice Designate Justice P. N. Bhagwati on 17-6-85 to the Sri Lankan Bar Association.]

## Essay Competition in Memory of Bishop Lakhman Wickremasinghe

The Cnurch of Ceylon Youth Movement CCYM has organised an essay competition in memory of Bishop Lakshman Wickremasinghe to mark the "Year of the Youth".

The late Bishop was a contemporary leader of our times, and past general secretary and president of the CCYM before he became the Bishop of Kurunegala.

The CCYM hopes to set up the "Bishop Lakshman Wickremasinghe Memorial Essay Competition Fund" in the Diocese of Colombo in order to ensure the continuity of the essay competition. Donations are welcome.

This year's essay competition has been divided into two groups. Group A — from 14 to 20 years and Group B — 20 years and over.

The themes for Group A are, 'Let us build a new world devoid of environmental pollution, 'Youth responsibility of a developing country, and "An open economy helps the spread of narcotics'. In this group competitors will have to restrict their essays from 1000 to 1500 words.

The themes for Group B are 'Let us build a united Sri Lanka free of racism' 'We will fight for peace and not for war', and 'Let's preserve our culture and heritage'. In this group competitors will have to restrict their essays from 1500 to 2000 words.

Entries close on July 30, Entries should pe addressed to Mr. Nelson Mendis, 1/10. Church Road, Rawathawatte, Moratuwa.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. Q/J/29/News/85.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press Kankesanthurai Road, Jaffna on Friday, 28th June 1985 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.